குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 53-2007

அ.சா. 1

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. பாண்டியன் (மோட்டார் வாகன ஆய்வாளர்) |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு. SK ஆறுமுகம் |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 60 |

The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition.

**1873-ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. 12.02.2026**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை தொடர்ச்சி :-**

நான் சென்னையில் இணைபோக்குவரத்து ஆணையாராக பணிப்புரிந்து ஓய்வு பெற்று தற்போது நாமக்கலில் குடியிருந்து வருகிறேன். இவ்வழக்கில்

தொடர்புடைய பேருந்தை அசோக் லைலேண்ட் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டதாக வாகனத்தை ஆய்வு செய்த போது தெரியவந்ததால் அந்த வாகனத்தின் உண்மை தன்மையை தெரிந்துகொள்ளும் பொருட்டு ஒசூர் அசோக் லைலேண்ட் நிறுவனத்திற்கு நான் கடிதம் வைத்தேன். அதை பெற்றுக்கொண்டு அந்த நிறுவனமானது வழக்கு பேருந்தில் இருந்த அடிசட்டை எண் (Chasis No.) மற்றும் பொரி எண்(Engine No.) ஆகியவற்றை பரிசோதனை செய்து மேற்படி பேருந்தினை தங்கள் நிறுவனத்தால் தயாரித்து வழங்கபடவில்லை என்று அசோக் லைலேண்ட் நிறுவனத்தால் சான்று அளிக்கப்பட்டது. அந்த சான்றை அப்போது தருமபுரி மாவட்ட வட்டார போக்குவரத்து அலுவராக பணிப்புரிந்த திரு. சாரநாதன் என்பவரிடம் ஒப்படைத்தேன். அவருக்கு கீழ் 2001–2004 ஆண்டு வரை பணிப்புரிந்துள்ளேன். இந்த வழக்கு சம்பவம் தொடர்பாக தருமபுரி மாவட்ட வட்டார போக்குவரத்து அலுவலர் சாரநாதன் புகார் கொடுத்தார். அதன் மீது குற்ற வழக்கு தொடரப்பட்ட விவரம் எனக்கு தெரியும். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**</u>

நான் 1995ம் ஆண்டு மோட்டார் வாகன ஆய்வாளராக முதலில் புதுகோட்டை மாவட்டத்தில் பணியில் சேர்ந்தேன். ஒசூரில் 2001 முதல் 2005 ஆண்டு வரை மோட்டார் வாகன ஆய்வாளராக பணியில் இருந்தேன். இந்த வழக்கில் வட்டார போக்குவரத்து அலுவலரிடம் யார் புகார் கொடுத்தார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. வட்டார போக்குவரத்து அலுவலரிடம் கொடுக்கப்படடதாக சொல்லும் புகாரை நான் காவல் துறைனரிடம்

ஒப்படைத்தேனா என்றால் புகாரின் பேரில் நானே நடவடிக்கை எடுக்க அதிகாரம் உள்ளதால் நான் விசாரணை செய்து அறிக்கையுடன் சேர்த்து வட்டார போக்குவரத்து அலுவலரிடம் ஒப்படைத்துவிட்டேன். பொதுவாக எங்களுடைய அலுவலகத்தில் நாங்கள் பணி நிமித்தமாக வெளியே சென்றால் தினசரி பதிவேட்டில் குறிப்பிடுவோம் என்றால் எங்கள் அலுவலகத்தில் நடமாடும் பதிவேட்டில் குறிப்பிடுவோம். எங்களுடைய அலுவலுக பணிநேரம் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 வரை. எங்கள் அலுவலக களபணி அலுவலருக்கு பணி நேரம் கிடையாது அவருக்கு 24X7 நேரமும் பணி பொறுப்பு உண்டு. 12.11.2003ம் தேதி பேரிகையில் உள்ள எந்த ரோட்டில் வைத்து வாகன தணிக்கை செய்தேன் என்றால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை ஆனால் என்னுடைய தணிக்கை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன். என்னுடைய தணிக்கை அறிக்கையை காவல் துறையினரிடம் ஒப்படைத்தேனா என்றால் தேவை இல்லாததால் ஒப்படைக்கவில்லை. உண்மையிலேயே நான் பேரிகையில் வாகன தணிக்கை செய்து இருந்தால் பேரிகையில் இருந்து செல்லும் சாலைகளில் எந்த சாலையில் வைத்து வாகன தணிக்கை செய்தேன் என்று என்னுடைய தணிக்கை அறிக்கையில் சொல்லி இருப்பேன் என்றால் சரியல்ல. என்னுடைய விசாரணையில் வழக்கு சம்பந்தப்பட்ட பேருந்தின் என்னென்ன ஆவணங்கள் என்னிடம் ஒப்படைக்கப்பட்டது என்றால் அனுமதி சீட்டு மட்டும் என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. அதன் அனுமதி காலாவதி ஆகி இருந்ததது. அந்த அனுமதி சீட்டை காவல் நிலையத்தில் ஒப்படைத்தேனா என்றால் என்னுடைய தனிக்கை அறிக்கையோடு இணைத்து அனுப்பினேன். நான் வாகன தணிக்கை செய்த போது பேருந்தில் எத்தனை நபர்கள் பயணம்

செய்தார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை ஆனால் பேருந்தில் பயணிகள் இருந்தார்கள். அவர்களுடைய பயண சீட்டை கைப்பற்றி அறிக்கையுடன் இணைத்துள்ளேன். பேருந்தை நான் கைப்பற்றியதாக சொல்வதற்கு பிறகு பேருந்தை காவல் நிலையத்திற்கு யார் ஓட்டி சென்றார் என்றால் அந்த பேருந்தின் ஓட்டுநரே ஓட்டி வந்தார். நான் காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் புகார் கொடுக்காமல் பேருந்தை காவல்நிலையத்தில் வைத்ததே சட்டப்படி தவறு என்றால் சரியல்ல. நான் பேருந்தை காவல் நிலையத்தில் ஓப்படைத்தற்கு ஒப்புதல் ரசீது வாங்கினேனா என்றால் வாகன கைப்பற்றுதல் அறிக்கை பெற்றேன். நான் பேருந்தை கைப்பற்றியது சம்பந்தமாக பேருந்தின் உரிமையாளருக்கு நான் அறிவிப்பு வழங்கினேனா என்றால் இல்லை. பேருந்தின் ஓட்டுநருக்கு அறிக்கை நகல் கொடுத்தேன். இந்த வழக்கில் பேருந்தை கைப்பற்றி காவல் நிலையத்தில் ஒப்படைத்தற்காக நான் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட பேருந்தை அனுமதி இல்லாமல் இயக்கியதால் அதன் மீது வட்டார போக்குவரத்து அலுவலருக்கும் மாவட்ட ஆட்சியருக்கும் அதிகாரம் உள்ளது என்பதால் புகார் கொடுக்கவில்லை. அசோக் லைலேண்ட் நிறுவனத்திற்கு எந்த தேதியில் யாருக்கு அறிவிப்பு வழங்கினேன் என்றால் ஞாபகம் இல்லை. நான் கொடுத்த அறிவிப்பிற்கு எத்தனை நாட்கள் கழித்து அறிக்கை கொடுத்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை. இவ்வழக்கில் கைப்பற்றபட்ட KA-03 B-0664 பேருந்து முறையாக பெங்களூரு இந்திரா நகர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் முறையாக முறையாக பதிவு செய்யப்பட்டு அனுமதி பெறப்பட்டது என்றால் அதைப்பொருத்து நான் விசாரிக்கவில்லை.

மேற்சொன்ன பேருந்து இருந்த Engine and Chasis Number கொண்ட வாகனம் எந்த நிறுவனத்தால் தயார் செய்யப்பட்டது என்று நான் விசாரிக்கவில்லை. வாகனத்தின் Engine and Chasis Number அசோக் லைலேண்ட் நிறுவனத்தால் சான்று வழங்க முடியாது என்பதால் எங்களுடைய கோரிக்கையை ஏற்று அசோக் லைலேண்ட் நிறுவனத்தால் சான்று வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் கோரிக்கையின் பேரில் நான் பொய்யான அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை.**

**சாட்சி கூறியதனை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொண்டார்.**

**(ஒம். /–ஆர். நரசிம்மமூர்த்தி,)**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 ஓசூர்.**

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 53–2007

அ.சா. 3

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. செந்தில்குமார் (Assistant Genaral Manger – Ashok Leyland company Hosur) |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு. மலையப்பன் |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 57 |
| The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition. | | |

**1873–ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. 12.02.2026**

**(எதிரி ஆஜர்)**

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி :–</u>**

நான் ஒசூர் அசோக் லைலேண்ட் நிறுவனத்தில் துணை பொது மேலாளராக பணிப்புரிந்து வருகிறேன். கடந்த 2003 ம் ஆண்டு நான் விற்பனை பிரிவு அதிகாரியாக பணிப்புரிந்து வந்த போது ஒசூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இருந்து மோட்டார் வாகன ஆய்வாளரின்

வேண்டுக்கோள் கடிதம் பெறப்பட்டது. அந்த வேண்டுக்கோள் கடிதத்தில் ஒரு கனரக வாகனத்தின் Chasis Number and Engine Number குறிப்பிட்டு அந்த வாகனம் எங்கள் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டதா என கோரப்பட்டது இருந்தததது. அந்த கடிதத்தில் குறிப்பிட்டு இருந்த Chasis Number and Engine Number வைத்து எங்கள் அலுவலகத்தில் கணினி பதிவேற்றம் செய்யப்பட்ட Chasis Number பட்டியலில் ஒப்பீடு செய்து பார்த்தில் அந்த கடிதத்தில் குறிப்பிட்டு இருந்த Chasis Number and Engine Number கொண்ட கனரக வாகனத்தை எங்கள் நிறுவனத்தால் தயாரிக்கப்படவில்லை என தெரியவந்தது அது குறித்து நான் எழுத்து மூலமாக மோட்டார் வாகன ஆய்வாளருக்கு பதில் வழங்கினேன். அவ்வாறு மோட்டார் வாகன ஆய்வாளருக்கு வழங்கிய பதிலில் ஒரு பிரதியை எங்கள் அலுவலகத்தில் பாரமரித்து வரப்படுகிறது. எங்கள் அலுவலகத்தில் பாரமரித்து வரப்படும் நான் வழங்கிய பதிலின் பிரதியை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளோம்.

**அரசு தரப்பு வேண்டுக்கோளுக்கிணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

**சாட்சி கூறியதனை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொண்டார்.**

**(ஓம். /—ஆர். நரசிம்மமூர்த்தி,)**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 ஓசூர்.**